மூன்றாவது தேர்ச்சி : இறைகட்டளைகளைப் பின்பற்றுவதன் வழியாக மனித உறவுகளை வளர்த்துக் கொள்வர்

**13**

## 3.1. எம் இறைவன் ஒருவரே

இறையன்பை உமது வாழ்வில் அனுபவித்துள்ளீரா?
இவற்றுக்கு நன்றி கூறியுள்ளீரா? இறைவனை மகிமைப்படுத்தியுள்ளீரா?
இறையன்பைக் கண்டு அனுபவிக்க நீர் என்ன செய்ய வேண்டும்?

**நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக......**



இயேசு இறைத்தந்தையின் அன்பை அனுபவித்து, அவரை மகிமைப்படுத்தி, தமக்கு ஏற்பட்ட சோதனைகளை எவ்வாறு வெற்றி கொண்டார் என அறிவோம்.



பின்பு அலகை அவரை அழைத்துச் சென்று உலகத்தின் அரசுகள் அனைத்தையும் ஒரு நொடிப்பொழுதில் அவருக்குக் காட்டி அவரிடம் ‘‘இவற்றின் மேல் முழு அதிகாரத்தையும் இவற்றின் மேன்மையையும் உமக்குக்கொடுப்பேன். இவை யாவும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. நான் விரும்பியவருக்கு இவற்றைக் கொடுப்பேன் ‘‘நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையவை ஆகும்” என்றது.

இயேசு அதனிடம் மறுமொழியாக ‘‘உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக” என்று மறை நூலில் எழுதியுள்ளது என்றார்.

(லூக். 4:5-8)

“உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக” எனும் பத்துக்கற்பனைகளில் முதலாவது கற்பனையை இயேசு தமது வாழ்வில் நிறைவேற்றியதை அறிகிறோம். இதன் அடிப்படையில் இயேசுவைப் பின்பற்றுபவர்களாக முதலாவது கற்பனையைக் கடைப்பிடித்து வாழவேண்டும் எனச் சிந்திப்போம்.

மனிதனின் இவ்வுலக வாழ்வு பல்வேறு தேவைகளால் நிறைந்துள்ளது. உலக வளங்கள் மனிதனுக்கு அவசியமானவை, அவன் அவற்றை தக்க முறையில் பயன்படுத்தி தானும், பிறரும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும். ஆனால் படைப்புப் பொருட்கள் மேல் அளவற்ற ஆசை கொள்ளக்கூடாது. அவற்றுக்கு அடிமையாகக் கூடாது.


இலவச விநியோகத்திற்காக

உலக செல்வங்கள் அனைத்தையும் தருவதாக கூறி அலகை இயேசுவை சோதித்தது. எல்லாவற்றையும் விட தந்தையின் அன்பு பெறுமதியானது. எந்தச் செல்வமும் அதற்கு ஈடாக முடியாது என்பதை இயேசு நன்கு உணர்ந்திருந்தார். தந்தைக்கும் இயேசுவுக்குமிடையில் நெருக்கமான உறவு இருந்தது. இதை நாம் அவரது வாழ்வின் பல சந்தர்ப்பங்களில் தெளிவாக காண முடியும். அந்த அன்பே இங்கும் அவரது சோதனை வேளையிலும் வெளிப்படுகிறது.

மறையின் முதல் சொல் ஆராதனையாகும்.
இறைவனைப் படைத்தவராகவும், மீட்பராகவும் இருப்பவை அனைத்தினதும் ஆண்டவராகவும் அதிபதியாகவும், என்றும் இரக்கம் நிறைந்த அன்பு உள்ளவராகவும் ஏற்றுக்கொள்வதே இறைவனை ஆராதிப்பதாகும். உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவரை மட்டுமே ஆராதிப்பாயாக என இயேசு இணைச்சட்ட நூலை மேற்கோள் காட்டிக் கூறுகிறார்.
கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி # 2096

கடவுள் ஒருவரே. ஏனையவை அனைத்தும் அவரால் படைக்கப்பட்டவையே. அவை நிரந்தரமற்றவை என ஒரே இறைவனை அறிந்து படைப்புக்கள் ஆகிய நாம் படைத்தவருக்கு முழு உள்ளத்தோடும் முழு ஆன்மாவோடும் முழு வலிமையோடும் ஆராதனை செலுத்துவோம். இதுவே முதலாவது கற்பனையாகும்.

| **இயேசு** | **நான்** |
|---|---|
| இறையாட்சியைக் கட்டியெழுப்ப அழைக்கப்பட்ட இயேசு உலக அரசுக்குக் கட்டுப்படவில்லை. | |
| அலகையை ஆராதிக்க மறுத்த இயேசு ஒரே இறைவனை மட்டும் ஆராதிக்க வேண்டுமென துணிவுடன் பறைசாற்றினார். | |
| இறைவார்த்தையில் ஊன்றியவராக இறை அறிவுடன் செபத்தில் நிலைத்திருந்தபடியால் செல்வம், புகழ், சுகபோகம் ஆகியவற்றிற்கு அடிமையாகவில்லை. | |

''இருக்கிறவராக இருக்கிறவர் நானே'' என தம்மை வெளிப்படுத்திய உயிருள்ள கடவுள், எம்மை அன்பு செய்து கொண்டிருக்கிறவர். எம்மைக் காத்து வழிநடத்திக் கொண்டிருக்கிறவர். வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறவர். அன்பாகவே இருக்கிறவர். இந்த அன்பு அவரை ஆராதிக்கும்படி நம்மை அழைக்கிறது.



மோசே கடவுளிடம், ''இதோ! இஸ்ரயேல் மக்களிடம் சென்று உங்கள் மூதாதையரின் கடவுள் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார் என்று நான் சொல்ல, 'அவர் பெயர் என்ன?' என்று அவர்கள் என்னை வினவினால், அவர்களுக்கு என்ன சொல்வேன்?'' என்று கேட்டார். கடவுள் மோசேயை நோக்கி, 'இருக்கின்றவராக இருக்கிறவர் நானே' என்றார். மேலும் அவர் நீ இஸ்ரயேல் மக்களிடம், 'இருக்கின்றவர் நானே' என்பவர் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல்'' என்றார்.

வி.ப. 3:13-14

அன்று தம்மை வெளிப்படுத்தி மோசேயை அழைத்த இறைவன் இன்று என்னையும் அழைக்கிறார். எதற்காக?

மாட்சிமை நிறைந்த இறைதந்தை தம்மையும் தமது பெயரையும் வெளிப்படுத்தியுள்ளார். மோசேக்குத் தம்மை வெளிப்படுத்திய இறைத்தந்தையை இன்று நாமும் அறிகிறோம்.

இறைவன் நல்லாயனாக இருந்து தாவீது அரசனைப் பாதுகாத்து, வழி நடத்தினார். 23ம் திருப்பாடலில் ''ஆண்டவரை நமது நல்லாயனாகக் கொண்டிருப்பதால் நமக்கு எதுவும் குறைவுபடாது'' என அழகாகக் கூறுகிறார்.


இலவச விநியோகத்திற்காக

**திருப்பாடல் 23**

ஆண்டவர் எனதாயன்
எனக்கு வேண்டியதொன்றுமில்லை

ஆண்டவர் எனது ஆயன் எனக்கு
வேண்டிய தொன்றும் இல்லை
பசும்புல் மேய்ச்சல் நிலத்தில் என்னை
படுக்கச் செய்கின்றாரே

தேற்றும் நீரருகே எனை அழைத்து
புத்துயிர் ஊட்டுகின்றாரே
தம் பெயர் பொருட்டெனை
நேரிய வழியில் நடத்திச்
செல்கின்றாரே
நடத்திச் செல்கின்றாரே

121ம் திருப்பாடலில் ஆண்டவருடைய அன்புக்கரம் தம்மைக் காத்து வழி நடத்துவதை இஸ்ராயேல் மக்கள் உருக்கமாகப் பாடுகின்றனர். ஆண்டவரை நம்பியிருப்போர் அவரது கரத்தால் ஆசீர் பெறுவர். இஸ்ரயேல் மக்களுக்கும் இறைவனுக்கும் இடையேயிருந்த **அன்புறவை** இது வெளிப்படுத்துகின்றது. இஸ்ரயேல் மக்கள் அனுபவித்த இறைவல்லமையை நாமும் அனுபவிக்கிறோம். விழிப்பாயிருந்து இவற்றை நாம் காணவேண்டும்.

| திருப்பாடல் | நாம் பெறும் செய்தி |
|---|---|
| 23 | |
| 121 | |

ஒரே இறைவனை மட்டும் ஆராதிக்க வேண்டும் என பழைய ஏற்பாட்டின் பத்துக் கட்டளைகளில் மட்டுமல்ல ஏனைய நூல்களிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என அறிகிறோம். அது மட்டுமல்ல, இறைதந்தை மட்டில் மக்கள் கொண்டிருந்த விசுவாசமும், அனுபவித்த இறை வல்லமையும் இதன் வழியாக வெளிப்படுத்தப்படுகின்றன.

புதிய ஏற்பாட்டில் இயேசு இதற்கு மாதிரியாக இருக்கிறார் என்பதையும் அறிகிறோம். அவ்வாறே, கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலிலும் இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகில் மிகப் பெரிய வல்லமை வெளிப்பட்டுள்ளது. இவ்வல்லமையுள்ளவர், அதாவது, இறைவன் ஒருவர் என்பதும், அவர் இருக்கிறவராக இருக்கிறவர் எனவும், எம் எல்லோரையும் பாதுகாத்து, ஊட்டமளித்து, வழிநடத்திய முறைகளையும் மேற்குறிப்பிட்ட எல்லாத் திருவிவிலியப் பகுதிகளிலும் வெளிப்படுவதை நாம் அறியலாம்.

## செயற்பாடு:

மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடவும்.

□. 1. சீனாய் மலையருகே இறைவன் மோசேக்கு காட்சி கொடுத்த வடிவம்.

1. அக்கினி நா  2. நெருப்புக்கொழுந்து
3. அக்கினிகரம்  4. நெருப்புத்தூண்

2. கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி # 2096ல் குறிப்பிடப்பட்டிருப்பது

1. இறை ஆராதனை  2. இறைமீட்பு
3. இறைபிரசன்னம்  4. இறையிரக்கம்

3. மோசேக்கு இறைவன் தமது பெயரை ............................... என அறிமுகப்படுத்தினார்.

1. எல்லாம் வல்ல கடவுள்  2. எலோயிம்
3. யாவே  4. இருக்கிறவர் நாமே

4. சோதிடம், எண்சாஸ்திரம் இவற்றில் நம்பிக்கை வைப்பது ...................... கற்பனைக்கு விரோதமான பாவமாகும்.

1. முதலாம்  2. நான்காம்  3. இரண்டாம்  4. மூன்றாம்

□□. இறைவன் ஒருவரையே ஆராதிப்பாயாக என இணைச்சட்ட நூலில் குறிப்பிடப்பட்டுள்ள முறையை எழுதுக.

□□□. இறை வெளிப்பாட்டைப் பெற நீர் செய்யவேண்டியவற்றை எழுதுக.

□□. இறைவல்லமையை உலகிற்கு வெளிப்படுத்த நீர் முன்வைக்கும் வழிமுறைகள் என்ன?

### வாழ்க்கைக்கு

நான் என் ஆண்டவரை அறிந்து
அவர் ஒருவரையே ஆராதிப்பேன்.
இறைவல்லமையை எனது வார்த்தையாலும்
வாழ்வாலும் உலகுக்கு வெளிப்படுத்துவேன்.